# இனப்பிரச்னை தீர்வில் பின்னடைவு ஏற்படலாம்?

(வாஷிங்டன்)
இலங்கையில் சுமுக நிலை தோன்றுவதில் பின்னடைவு ஏற்படக்கூடியதொரு நிலை தென்படுவதாக 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தெரிவித்துள்ளது.

இனப்பிரச்னைத் தீர்வுக்கான நல்லதொரு சூழ்நிலை தோன்றி

[4ம் பக்கம் பார்க்க]


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 33 | வைகாசி 19 | துல்ஹஃதா 18 | இதழ 111

யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 2-06-1991


## இந்திய பிரஜைகளை வெளியேற்ற முயற்சி

(கொழும்பு)
இந்திய கடவுச்சீட்டுப் பெற்றோரை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு இலங்கை அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்திய கடவுச்சீட்டுப் பெற

[4ம் பக்கம் பார்க்க]

## இராணுவம், ரெலோ பெரும் அட்டகாசம்

[மட்டுநகர்]
மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவமும், ரொலோவும் தினமும் பொதுமக்களின் வீடுகளை சூறையாடுவதுடன், மக்களை பெரும துன்புறுத்தலுக்குள்ளாக்கியும் வருகின்றனர்.

கடந்த 29-ம் திகதி மண்டூர்

(4ம் பக்கம் பார்க்க)

## ● ராஜீவ் கொலையின் எதிரொலி

# இந்தியாவிலிருந்து பல தமிழர் இலங்கை திரும்புகிறார்கள்!

(சென்னை)
இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழர் பலர் நாடு திரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அகதிமுகாம்களுக்கு வெளியே தங்கி இருந்த பல தமிழர்களே அச்சம் காரணமாக இலங்கை திரும்புகிறார்கள்.

ராஜீவின் கொலையை அடுத்து தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் அகதிகள் பலர் கொலைப் பயமுறுத்தலுக்குள்ளானதுடன் சிலர் தாக்கப்பட்டுமுள்ளனர்.

இந்தியாவிலிருந்து இலங்கை வரும் சகல விமானங்களிலும் தினமும் சகல ஆசனங்களும் நிரம்பிவழிந்த நிலையிலேயே வருகிறதாம்.

இதேவேளை தமிழக அகதி முகாம்களை சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்

(4ம் பக்கம் பார்க்க)

## தலைவர் 'பிரபா' மிகப் பெரிய கலைஞர்

(யாழ்ப்பாணம்)
''எங்களுக்கென்று தனித்துவமான மிகப்பெரிய தலைவர் இருக்கிறார். அவர் கூட மிகப் பெரிய கலைஞர் அவர் நெறிகளில்தான் போராட்டம் என்றாலும் சரி, இசை என்றாலும் சரி அதற்கு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன.''

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர்நாயகம் யோகி, நேற்று மாலை யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ''பரணி பாடுவோம்'' என்ற இசை நாடா வெளியீட்டு விழாவின் போது குறிப்பிட்டார்.

(4ம் பக்கம் பார்க்க)

## மண்டபம் முகாமிலிருந்து 36 அகதிகளை காணவில்லை

(சென்னை)
தமிழ்நாடு இராமநாதபுரம் மண்டபம் அகதி முகாமில் இருந்து 36 இலங்கைத் தமிழ் அகதிகள் காணமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முகாமில் 2,374 குடும்பங்களைச் சேர்ந்த 9,185 பேர் தங்கியிருந்தார்கள்.

இந்த அகதி முகாமுக்கு, அண்மைக் காலத்தில் திடீர் விஜயம் மேற்கொண்ட அரசு அதிகாரிகள் முகாமிலுள்ள அகதிகளை பட்டியல்படுத்திப்

(4-ம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது

(லுவான்டா)
அங்கோலாவில் 16 ஆண்டு காலமாக 'யுனிரா' இயக்கத்திற்கும், அரசுப் படைகளுக்கும் இடையே நிலவிவந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுச் சமா

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் குழுக்களுடன் இந்திய குழு சந்திப்பு

(கொழும்பு)
திரு. ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இலங்கை வந்துள்ள இந்திய சிறப்புப் புலனாய்வுக் குழுவினர். கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க்

[4ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் மோதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியே வர முற்பட்டபோது விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாமல்

[4ம் பக்கம் பார்க்க]

## பிரிட்டிஷ் அமைச்சரின் இலங்கை விஜயம் ரத்து

லண்டன்] பிரிட்டன் வெளியுறவுதுணை அமைச்சர் திரு. மாக்லென் ஒக்ஸ்வால்ட்

(4ம் பக்கம் பார்க்க)


உ

புதிய இடத்தில் ஸ்தாபனம்
மீண்டும் திறக்கப்படுகிறது

வெங்கடேஸ்வராஸ்ரோர்ஸ்

இல. 97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

எமது ஸ்தாபனம் விமானத்தாக்குதலினுல் முற்றாக சேதமடைந்தபடியால்

3-06-1991 திங்கட்கிழமை காலை
சுபநேரத்தில்
கஸ்தூரியார் வீதி 79-ம் இலக்கத்தில்

"வெங்கடேஸ்வரா"

என்னும் புதிய நாமத்துடன் திறக்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உரிமையாளர்கள்.

(சி 4794)


## புலிகள் மீது பழிசுமத்த இலங்கை தரப்பில் முயற்சி

(கொழும்பு)
ராஜீவ் காந்தியைப் புலிகளே கொலைசெய்ததாக இந்திய புலனாய்வு குழுவுக்கு இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் தகவல்களைத் திணித்து வருவதாக ஏ. எப் பி. செய்தியாளர் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

புலிகள் இக்கொலையைச் செய்தார்கள் என்பதற்கான எந்தவித ஆதாரமும் இதுவரை இலங்கையில் கிடைக்காத போதும் புலிகளே இதற்குக் காரணமென இலங்கை அதிகாரிகள் இந்திய புலனாய்வுக் குழுவிடம் பல்வேறு தகவல்களையும் திணித்து வருகிறார்களாம்.

எனினும் இத்தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவா என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (சி)

## லண்டன் பி. பி. ஸி.யில் புலிகளின் பாடல்

(லண்டன்)
லண்டன் பி. பி. ஸி. ஆங்கில சேவையில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் புரட்சிப் பாடலொன்று ஒலிபரப்பப்பட்டது.

இலங்கை தொடர்பான செய்தி விமர்சனத்தின் போது விடுதலைப் புலிகளின் ''பாதைகள் வளையாது பயணங்கள் முடியாது''

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

Computer Key Board அல்லது வேறு Computerகள் விற்பனைக்கு இருந்தால் உடன் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தூரதர்சன் தொழில் நுட்பகூடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன்சந்தி அருகாமை) (ஏ.1344)

### அம்பாள் திருமண சேவை

Teachers, B.Sc, Lecturers ஆகிய மணப் பெண்களுக்கு Engineers; Doctors; B.Sc, பட்டதாரி மணமக்கள் தேவை சின்னச்சாமிக்குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம. (சி-4794]

## கலைப்பீட பரீட்சை

[யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் ஆண்டு பரீட்சைகள் ஆகஸ்ற் மாதம் 5-ந் திகதி ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [153]

## முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் துரைவீதியில் உள்ள வீடொன்றை நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டபோது, கசிப்பு காய்ச்சிக்கொண்டிந்த இரு வாலிபர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இதன் பின்பு, கசிப்பு உற்பத்திக்குப்பயன்படுத்திய உபகரணங்கள் கைப்பற்றப்பட்டதுடன் இவ்வீட்டின் நிலத்துக்கடியில் புதைக்கப்பட்டிருந்த இரு கசிப்புப்பரல்களும் கண்டு பிடிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளினுல் நிர்மூலமாக்கப் பட்டன. (வி)

## சமூகசேவை அலுவலர் பதவி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு சமூக சேவை அலுவலர் வகுப்பு II பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கிறது.

ஜூன் 14ந் திகதிக்கு முன்பாக, பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணசபை திருகோணமலை என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்பட்டுள்ளனர் (153)

## இராணுவச் சிப்பாய் மரணம் நால்வர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டைப் பாலத்தடியில் கடந்த 29ந் திகதி இடம்பெற்ற மோதலில், இராணுவத் தரப்பில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற இம்மோதலில், நான்கு படையினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## தராசுப் படிகளுக்கு சீல் வைக்கப்படும்

[மானிப்பாய்]

யாழ். சச்சேரி நிறுவை, அளவைப்பகுதியினரால்இம்மாதம் 3, 4, 6, 7ம் திகதிகளில் சங்கானை பிரதேச சபைக் காரியாலயத்தில் வைத்துத் தராசு படிகளுக்குச் சீல்வைத்துக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

மேலும் வட்டுக்கோட்டைப் பகுதி மக்களுக்கு, வட்டுக்கோட்டை பிரதேச சபைக் காரியாலயத்தில் வைத்து இம் மாதம் 10, 11, 13, 14ம் திகதிகளில் மேற்படி சீல் வைத்துக்கொடுக்கப்படும் என்றும், இவ்வேலைகள், தினமும் காலை 8-30 மணிக்கும், பிற்பகல் 2-30 மணிக்குமிடையில் நடைபெறுமென்றும் கச்சேரி நிறுவை, அளவைப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (71)

## ஆயுர்வேத மருந்துகள்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச சபையின் வட்டக்கச்சி, உருத்திரபுரம், எட்டாம் வாய்க்கால், முரசுமோட்டை ஆகிய இடங்களிலே உள்ள இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் தருவிக்கப்பட்டுள்ளன. இதேவேளை இவ்வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய முரசுமோட்டை உப அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (83)

## தொழில்நுட்ப டிப்ளோமா பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த வெளிப் பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்தியக் கல்லூரியில் 91/92 ம் ஆண்டு விஞ்ஞான மாணி, தொழில் நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி ஆகியன ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராயும் இருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 5-ம் திகதியாகும். அனுமதிப்பதற்கான முதல் நிலைப் பரீட்சை இம்

(4-ம் பக்கம் பார்க்க)


தெல்லிப்பளை

பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

**முத்தமிழ் எழுச்சி விழா**

இடம்: உடுவில் ஊராட்சி மன்ற திறந்தவெளி அரங்கு.

காலம்: 04-06-1991 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி.

நிகழ்ச்சிகள்

மங்கள இசை: அளவையூர் சிதம்பரநாதன் குழுவினர், பாலகிருஷ்ணன் குழுவினர்.

சிறப்புச் சொற்பொழிவு: பேராசிரியர் கா. சிவத்தம்பி, தலைவர், நுண்கலைப்பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்.

இசையரங்கு: சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் குழுவினர்.

பட்டி மன்று: கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் குழுவினர்.

விடயம்: 'நாமிருக்கும் நாடு நமதென்று அறிந்தோமா?'

நாட்டிய நாடகம்: ''தலைவனைத் தேடி......''

நாடகம்: ''சகுனியர் மூவர்.''

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.

01-06-1991 [எ 1346]



# கும்பாபிஷேகம் காணும் பரமேஸ்வரம்

சைவப் பெருவள்ளலார் சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி 1974-ல் பல்கலைக்கழக யாழ். வளாகமாகி இன்று யாழ். பல்கலைக்கழகமாக மிளிர்கின்றது.

இதன் இதயமாகிய பரமேஸ்வரா ஆலய கும்பாபிஷேகம் இன்று காலை 11-00 மணிக்கு நடைபெறுகிறது.



சேர். பொன். இராமநாதன்

தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் இறுதியில் சங்காபிஷேகமும் நடைபெறும்.

(சி-4793)



பரமேஸ்வரா ஆலய கோபுரம்

# பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் வெளியேற்றத்தின் பின்னணி

(லண்டன்)

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் திரு. டேவிட் கிளாஸ்ரோன் மனித உரிமைகள் மீறலுக்கு எதிரான போராட்டங்களில் தீவிரமாக செயற்பட்டவர். அவருடைய இச் செயற்பாட்டை விரும்பாதவர்கள் போலிக்காரணங்களைக் கூறி அவரை வெளியேற்ற முடிவு எடுத்துவிட்டார்கள் என்று பி. பி. ஸி. யின் கொழும்பு செய்தியாளர் கிறிஸ்மொறிஸ் தெரிவித்தார்.

திரு. கிறிஸ்மொறிஸ் இது பற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது; கிளாஸ்ரன் அவர்கள் தேர்தலில் மேற்பார்வைசெய்யும் குழுவில் இருந்தார். அப்போழுது அவர் வாக்குச் சாவடிகளை பார்வையிட்ட சமயம் சில முறைகேடுகள் பற்றி ஒருவர் அவரிடம் முறையிட்டார். உடனே திரு. கிளாஸ்ரன் பொலிஸ்நிலையத்தில் சென்று புகார் தெரிவித்தார். நடந்தது இதுதான்.

சாதாரணமாக அரசுத்துறையினர் இதுபோன்ற விடயங்களை பெரிதுபடுத்துவதில்லை. கிளாஸ்ரன் செய்தது தவறு என்று கருதப்பட்டால் கூட அவரை வருத்தம் தெரிவிக்க சொல்லி பிரச்னையை அத்துடன் முடித்திருக்கலாம்.

ஆனால் குறிட்பிட்ட இப்பிரச்னையில் தூதுவரை திரும்ப அழைத்துக்கொள் என்று கேட்குமளவுக்கு சென்றுவிட்டது ஏன் என்பதே இன்று எழுந்துள்ள கேள்வியாகும்.

கிளாஸ்ரனுக்கு எதிராக கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் ஒரு குற்றச்சாட்டை எழுப்பினர். திரு. கிளாஸ்ரன் போதைப்பொருள் கடத்துவோருடன் தொடர்புகொண்டுள்ளார் என்று குற்றம்சாட்டினார். இதனை அவர் முற்ருக மறுத்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினரின் குற்றச்சாட்டு பழிசுமத்தும் வீண் குற்றச்சாட்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

ஏன் அவர் இவ்வாறு குற்றம் சுமத்தினுர் என்பதற்கு காரணம் கிளாஸ்ரன் ஸ்ரீலங்கா அரசு மனித உரிமைகளை மீறியிருப்பது பற்றி பேசி இருந்தார்.

இலங்கைக்கு பொருளாதார உதவியளிக்கும் நாடுகள் கடந்த ஆண்டு பாரிசில் கூடிய போது மனித உரிமைகள் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கை அரசு கணிசமான முன்னேற்றம் காண்பிக்காவிட்டால் பொருளாதார உதவிகள் கேள்வி குறியாகிவிடும் என எச்சரித்துள்ளன. எனவே இலங்கை அரசு, கிளாஸ்ரன் நாட்டில் இருந்தால் தொல்லை தான் என்று இப்படி அவரை வெளியேற்றும் விதத்தில் சொல்லியிருக்கலாம்

ஆனால் இலங்கையின் இச்செய்கை இலங்கைக்கு ஐரோப்பிய நாடுகளில் நண்பர்களை கூட்டாது என்பது மட்டும் உண்மை. (க)

# இன்று யாழ். பல்கலைக்கழக ஆலய மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

சேர். பொன். இராமநாதனுல் ஸ்தாபிக்கப்பட்ட இவ் ஆலயம் அன்மையில் புனரமைப்பு செய்யப்பட்டு தற்பொழுது கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

''பிரதிஷ்டா பூஷணம்' சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தலைமையில் பல குருமார்கள் கிரியைகளை நடாத்துவார்கள்.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தையொட்டி சமய சொற்பொழிவுகளும் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெறும். [க]

# கொழும்பு பயணிகள் மீது வவுனியாவில் துன்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா பேயாடிக்கூழாங்குளம் வயற்பகுதிகளில் நின்ற இராணுவத்தினர் கொழும்பு செல்வதற்காக நேற்று முன்தினம் வவுனியா புகையிரத நிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொதுமக்களை நோக்கி கடும் துப்பாக்கிப் பிரயோகத்தினையும், ஷெல் வீச்சுக்களையும் நடாத்தினுர்கள்.

இச்சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர். சிலர் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புப் பயணியான தேவதாஸ் ஜோன்ஸன் (22-வயது), வவுனியா அம்ப்ரேஸ் கபிரியேல் [ 9-வயது] ஆகியோர் படுகாயமுற்று யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலமணி நேரமாக இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தினுலும். ஷெல் தாக்குதலினுலும் இறந்தவர்களையும், காயப்பட்டவர்களையும் மீட்க முடியாதநிலையில் இருந்ததாக காயப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமையும் நேற்று முன்தினமும் பேயாடிக்கூழாங்குளம் வயல் பகுதிகளில் படையினர் கடும் துப்பாக்கிப் பிரயோகத்

(4ம் பக்கம் பார்க்க]

## இராணுவ நடவடிக்கையால் யாழ். நகரில் மின்சாரப் பகுதிக்கு ரூ.7கோடி 70லட்சம் நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினுல் யாழ். மாநகர சபை மின்சாரப் பகுதிக்கு 7 கோடி70 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின்சாரப் பகுதி உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

விமானக் குண்டு வீச்சினுலும், ஷெல் தாக்குதல்களினுலும் யாழ். நகரின் மத்தியில் உள்ள 60க்கும் மேலான வீதிகளின் மின் இணைப்புக்களும் மின்கம்பங்களும் சேதமடைந்துள்ளன. இவற்றை தற்காலிகமாக சீர்செய்வதற்கு 60 கிலோமீற்றர் மின்கம்பிகளும் நூற்றுக்கணக்கான மின்கம்பங்களும் தேவைப்படுகின்றன.

இவைதவிர யாழ். நகரிலுள்ள ஏழு உபமின்நிலையங்களும் முற்ருகச் சேதமடைந்துவிட்டன. இவற்றைச் சீர் செய்வதற்கு வேண்டிய இயந்திர உபகரணங்களோ அல்லது கட்டட உபகரணங்களோ ஏதும் தற்சமயம் இல்லை.

பாதிப்படைந்த வீதிகளில் 30 வீதிகளின் திருத்த வேலைகளை நாம் தற்போது மிக நவீன முறைகளில் செய்து முடித்துள்ளோம்.

இலங்கையில் கொழும்பிற்கு அடுத்தபடியாக 18,700 மின் பாவனையாளர் யாழ். நகரில் இருக்கின்றுர்கள். இவர்களில் 3,500க்கும் மேற்பட்டோரின் வீடுகளில் உள்ள மின்இணைப்புகளும் மின்கருவிகளும் சேதமடைந்துவிட்டன.

இவற்றை திருத்தம் செய்வதற்கு வேண்டிய உபகரணங்கள் எமது களஞ்சியச்சாலையில் இருந்தன. களஞ்சியச் சாலைமீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களினுல் அவை அனைத்தும் சேதமடைந்துவிட்டன என்றும் அவர் தெரிவித்தார். (வி)

# காரைநகரைச் சேர்ந்த 3000 குடும்பங்களுக்கு போரூட் உதவி

(சித்தன்கேணி)

போரூட் நிறுவனம் சுமார் 3000 குடும்பங்களுக்கு இலவசமாக நிவாரணம் வழங்கியுள்ளது,

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்துவந்து சித்தன்கேணி, சங்கானை, மூளாய், வட்டுக்கோட்டை, சுளிபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் ரூபா 1500/-க் குட்பட்ட வருமானத்தையுடைய 'இ' அட்டை வைத்திருக்கும் சுமார் 3000 குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி போன்ற உணவுப்பொருள்களை இலவசமாக விநியோகித்துள்ளனர்.

சுளிபுரத்திலுள்ள போரூட் நிறுவனத்தின் அலுவலகத்தில் வைத்து பொருட்கள் கடந்த நான்கு நாட்களாக விநியோகிக்கத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. [137)

## இராசி பலன்

**02-06-1991**
**ஞாயிற்றுக்கிழமை**

பஞ்சமி பி. இ. 2–36 வரை, உத்தராடம் மு. ப. 10-48 வரை. அமிர்தயோகம், இராகு காலம் மாலை 4–22 முதல் 5-52 வரை. சுபநேரம் காலை 8–52 முதல் 10-22 வரை.

மேடம்: வசதி வாய்ப்பு, பெரியோர் பாராட்டு, குடும்ப சுகம்.

இடபம்: வழித்தொல்லை, குடும்ப உறவில் விரிசல், மனத்துரோகம்.

மிதுனம்: உடல் உபாதை, சகோதர துன்பம், தொழில் முடக்கம்.

கடகம்: மனக்களிப்பு, பொதுத்துறை ஈடுபாடு, உல்லாச பயணம்.

சிங்கம்: காரியபலிதம் தொழில் லாபம், முதியோர் உதவி.

கன்னி: முரண்பாடு, அற்பர் நேசம், குடும்ப கஷ்டம், அசதி.

துலாம்: விரும்பியது நிறைவேருமை, தொழில் பகை, மனச்சுமை.

விருச்சிகம்: காரிய தடை, பயணங்களால் அலைச்சல், வீண் பகை.

தனுசு: புதிய அனுபவம், அதிஸ்டக்குறைவு, குடும்பக் கவலை.

மகரம்: விருந்தோம்பல், மக்கள் வருகை, தொழில் சிறப்பு.

கும்பம்: குழம்பிய நிலை, துயரச்செய்தி, அந்நியவாசம்.

மீனம்; அதிக யோசனை, மாமனுர் தொல்லை, மனக் குறைவு.

: ஜோஸ்யர்

# வயோதிப |மாதுவிடமிருந்து தங்கச் சங்கிலி அபகரிப்பு

(பண்டத்தரிப்பு)

வீட்டில் தமது சகோதரருடன் தனித்திருந்த வயோதிப மாது ஒருவரின் இரண்டரை பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலி இனம்தெரியாத நபர் ஒருவரினுல் அபகரிக்கப்பட்ட சம்பவம் மாவிட்டபுரம் கொல்லன் கலட்டியில் நடந்துள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து தூர இடங்களுக்கு அகதிகளாக சென்றுவிட்டதாகவும் இவர்கள் இருவருமே வீட்டில் தனித்து வசித்து வந்ததாகவும், சம்பவ தினத்தன்று ஒருவர் அங்கு வந்து தமக்கு தாகமாக இருப்பதாக கூறி தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு அந்த வயோதிப மாது அணிந்திருந்த தங்கச் சங்கிலியை திடீரென அறுத்துக் கொண்டு தப்பிஓடிவிட்டதாகவும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது. (72)

## 150 மாணவர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில கல்விகற்றுவந்த இடம் பெயர்ந்த மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல்கலைக்கழக மானியக்குழு ஏறக்குறைய 150 மாணவர்களை தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தற்காலிகமாக மாற்றம் செய்துள்ளது. (153)

# ஓய்வூதியர் கொடுப்பனவு பணமாக வழங்கப்படும்

(கொழும்பு)

வடபகுதி ஓய்வூதியர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் இனிமேல் பணமாகவே வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கிராமிய வங்கிகளும் ஏனைய வங்கிகளும் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

# ஆட்டோ சங்கருக்கு தூக்குத் தண்டனை

(சென்னை)

சென்னை திருவான் மியூரில் ஆறுபேரை கொலை செய்ததற்காக ஆட்டோ சங்கருக்கும் வேறு இருவருக்கும் தூக்குத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

செங்கல்பட்டு தலைமை நீதிபதி இந்த தீர்ப்பை வழங்கினுர்.

இவ்வழக்கில் இவர்களுடன் சம்பந்தப்பட்ட மேலும் ஐவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. [சி)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுப்தற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இதன் முதல் கட்டமாக 500 வீடுகளை நாவற்குழிப் பகுதியில் கட்டுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது

மேற்படி 500 வீடுகளை நிர்மாணிக்கும் சகல பொறுப்புக்களையும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக் வாசகர் தெரிவித்தார்.

இதுபற்றி அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

மிகுதி 500 வீடுகளை அராலிப் பகுதியில் நிர்மாணிப்பதற்கு, சர்வதேச செஞ்சிலு

(4-ம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் அனுதரவாக நிற்கும் லொறி, சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளத்திற்கும் நொச்சிமோட்டைக்கும் இடையிலுள்ள வீதியில் ஒரு லொறி, மாட்டுவண்டில் உட்பட பல சைக்கிள்கள் அனுதரவான நிலையில் நிற்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாகனங்களில் வந்தவர்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படாதபோதும் இவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரியவருகிறது. (153)

# இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 7000 கோடி டொலராக அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 7000 கோடி டொலரையும் தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது,

இந்நிலையில் அரசியல் உறுதிப்பாடு இல்லாத ஒரு நாட்டுக்கு பெரிய அளவில் புதிய கடன்களை வழங்க பல நாடுகளும் தயக்கம் காட்டி வருகின்றன.

அவசர தேவைகள் கருதி நிதி உதவுமாறு இந்தியா உலக வங்கியை கோரியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

இராமேஸ்வரம் கடற்பகுதியில்

# 3 கடற்படைக் கப்பல்கள் 24மணிநேரமும் தீவிரரோந்து

(சென்னை)

இராமேஸ்வரம் கடற்பகுதியில் இந்திய கடற்படையின் 3 கடற்கப்பல்கள் 24 மணி நேரமும் ரோந்துப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை தமிழகத்திற்கு வந்துள்ள 5 இராணுவ படையணிகளும் முக்கிய பகுதிகளில் முகாமிட்டுள்ளன. மேலும் கரையோர காவலுக்காக மேலதிக கடற்படை பிரிவுகளும் தமிழகம் அனுப்பப்பட்டுள்ளன. (ரி)

## லண்டன் பி.பி.ஸி.யில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என்ற பாடலின் சில வரிகள் ஆங்கில சேவையில் ஒலிபரப்பானது.

கடந்த சில தினங்களுக்கு முன் பி. பி. ஸி. கொழும்பு நிருபர் திரு. கிறிஸ் மொறிஸ் யாழ்ப்பாணம் வந்திருந்த போது இப்பாடலை ஒலிப்பதிவு செய்திருந்தார். (சி)

## கொழும்பு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தையும், ஷெல் தாக்குதலையும் பலமணி நேரம் மேற்கொண்டவேளையில் கொழும்பு செல்வதற்காக அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த பயணிகள் மீது படையினர் கடுமையாகத் தாக்கித் துன்புறுத்தி உள்ளனர். சிலரைச் சேற்றுச் சகதிக்குள் இருக்க வைத்தும், படுக்கும்படி செய்தும் தாக்கி உள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (56)

## பாதிக்கப்பட்ட

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சங்கம் முடிவு செய்துள்ளதாகவும், இதற்கெனத் தகுந்த இடம் தெரிவுசெய்யப்படுமென்றும் தெரிவித்தார். (வி)

## தொழில் நுட்ப

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 9-ம் திகதி நடைபெறும்.

செப்டம்பர் ஒக்டோபர்மாதமளவில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகும். (152)

## ராஜீவ் கொலையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புமாறு பல கட்சிகளும் கோரிவருவதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## மண்டபம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தபோது 36 பேர் காணாமல்போனது கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது,

இவர்கள் எவ்வாறு காணாமல் போனார்கள் என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ரி)

## பிரிட்டிஷ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் கொழும்பு செல்வதற்கான தமது விஜயத்தை உடனடியாக ரத்துச் செய்துள்ளார்.

நேற்று லண்டனிலிருந்து இச்செய்தி கொழும்புக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு, இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளாஸ்ரோவை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்ததையடுத்துபிரிட்டன் தனது விசனத்தை இச்செயல்மூலம் காட்டியுள்ளது. [பூ]

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றவர்களின் குடும்பத் தலைவர்களைக் கொழும்புக்கு அனுப்பி வையுங்கள்இவர்களை உடனடியாடி விமானம் மூலம் அனுப்ப நாம் சகல ஏற்பாடுகளையும் செய்கிறோம். பிரயாண டிக்கட் போன்றவற்றைப் பெற்றுக்கொடுக்க நாம் ஏற்பாடு செய்வோம்.

இவ்வாறு பெருந்தோட்ட அபிவிருத்திச்சபையின் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (23)

## தலைவர் பிரபா

[1-ம் பக்கத்தொடர்ர்ச்சி]

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; போராளிகளாகிய எங்களின் எண்ணக் கருத்துக்களை பாடலாகத் தந்துள்ளோம். நாம் தனிப்பட்ட முறையில் அம்மா, அப்பா, தங்கை, தம்பி என்ற எண்ணங்களை விட்டு இந்த நாடு, எமது நாடு இங்கு வாழும் மக்கள் எங்கள் மக்கள் என்ற உணர்வுகளில் மிதமிஞ்சி நிற்கின்றோம். அதனால்தான் ஒரு போராளி தனது குடும்ப உணர்வுகளை மறந்துவிட்டு, போராட்டத்தில் சாவதற்குக் கூட ஆயத்தமாக இருக்கிறான். இதனால் சில வேளைகளில் கல்நெஞ்சக்காரர்கள் மாதிரித் தென்படும். ஆனால் நாங்கள் இளகிய நெஞ்சம்கொண்டவர்கள்.எங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் எங்களுடன் இணைந்து விடுங்கள்.

காட்டிக் கொடுப்பவர்கள், துரோகிகள் போன்றவர்களை நாம் மன்னிக்க முடியாது'' என்றார். (152)

## உள்நாட்டுப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் சோவியத் வெளியுறவு அமைச்சர் மற்றும் ஐ. நா. செயலர் பெரஸ் டி கொய்லர் முன்னிலையில் இவ்வொப்பந்தம் லிஸ்பன் நகரில் கைச்சாத்தானது. (பூ)

## இனப்பிரச்சனை

[1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தபோது ராஜீவின் கொலை சிலவேளைகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

மேலும் பிரிட்டிஷ் தூதருக்கு எதிரான விவகாரம் இலங்கையின் உள்நாட்டு நிலையைப் பாதிக்கக்கூடிய சாத்தியமுண்டென்றும் அச்செய்தி கூறியது. (சி)

## தமிழ் குழுக்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குழுக்களுடன் நேற்றுப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளது.

எத்தகைய குண்டுகள் சமீப காலத்தில் இலங்கையில் பாவிக்கப்பட்டன என்பதை இக்குழுக்கள் மூலம் அறிவதே இந்தப் புலனாய்வுப் பிரிவினரின் நோக்கமாகும். (பூ)

## ★ செவ்வாய் நாடு திரும்புவர்

(கொழும்பு)

ராஜீவ் கொலை தொடர்பாகப் புலனாய்வு நடாத்தும் இந்திய புலனாய்வுக் குழு செவ்வாய்க்கிழமை நாடு திரும்புவார்களெனத் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## இராணுவம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியில் இவர்கள் பல பொது மக்களின் வீடுகளை சூறையாடி, பெறுமதிமிக்க பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர். (வி)

## ஆனையிறவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் மீண்டும் முகாமுக்குள் சென்றுவிட்டனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற இத்தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தரப்பில் ராகுலன் (குமாரசாமி குகானந்தன் - கிளிநொச்சி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (வி)


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

### யாழ்ப்பாணக் கிளை

வலி. வடக்கு (தெல்லிப்பளை)

உதவி அரசாங்க அதிபர் பிரிவு

மேற்படி கூட்டம் 06 - 06 - 91ம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களை இதில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,

யாழ்ப்பாணக்கிளை.

73, கண்டிவீதி,

யாழ்ப்பாணம்.

(ஏ-1349)




# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

வடமராட்சி அரசியல் பொறுப்பாளரும்,

வடமராட்சி பதில் பொறுப்பாளருமான

## வீரவேங்கை மேஜர் சலாம்

அவர்கள்

## (வ.சி. நல்லராசன் (பழம்)இமையாணன்)

வீரஜனனம்: 17-09-1956

வீரமரணம்: 02-06-1988

மூன்று ஆண்டுகள் கழிந்து போனது தானய்யா!
மூன்று நிமிடமே போனதுபோல் இருக்குது நினைவய்யா!
கோட்டை வீழ்ந்து எங்கள் கொடியும் பறக்குது பாரய்யா!
எங்களின் தேசியம் எழுந்தே இன்று சிறக்குது பாரய்யா
தமிழீழ இருள் விலகும்நாள் எழுந்து வந்தது பாரய்யா - உந்தன்
இலட்சியம், ஈடேறும் நாள் வந்தது, ......... பாரய்யா.. ......

சிற்றூர் அவைகள்:

இமையாணன்,
கரணவாய் மத்தி,
இமையாணன் மேற்கு,
கரணவாய் - மேற்கு,
கரணவாய்.

02-06-1991

(சி 4795)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81